எழுவாய் என்பது என்ன?

- ஒரு செயல் நிகழ்வதற்குக் காரணமாய் இருப்பது எழுவாய்.
- எழுவாய் என்பது பெயர்ச்சொல்.
- பெரும்பாலும் வாக்கியத்தின் முதலில் வரும்.

M.P.Kajan

www.kedu.lk

எழுவாயைக் கண்டறிவது எப்படி?

யார் , **எது** , அல்லது **எவை** என்னும் கேள்விகளுக்கு விடை கொடுக்கும்.

எடுத்துக்காட்டு:

அப்பா வாகனத்தைக் கழுவினார்.

கேள்வி : **யார்** கழுவினார்?

விடை : **அப்பா** *(எழுவாய்)*

M.P.Kajan

www.kedu.lk

எழுவாயைக் கண்டறிவது எப்படி?

எடுத்துக்காட்டு:

மயில் தோகையை விரித்து ஆடியது.

கேள்வி : எது ஆடியது?

விடை : மயில் (எழுவாய்)

M.P.Kajan

மயில்கள் தோகையை விரித்து ஆடின.

கேள்வி : எவை ஆடின?

விடை : மயில்கள் (எழுவாய்)

www.kedu.lk

பயனிலை என்றால் என்ன?

- பயனிலை என்பது ஒரு வினைச்சொல்.
- பெரும்பாலும் வாக்கியத்தின் இறுதியில் வரும்.
- அது எழுவாயின் செயலைக் குறிக்கும் சொல்.
- எல்லா வாக்கியங்களிலும் பயனிலை இருக்கும்.

M.P.Kajan

www.ikeduk.lk

பயனிலையைக் கண்டறிவது எப்படி?

வாக்கிய இறுதியில் வரும் வினைச்சொல்

எடுத்துக்காட்டு: M.P.Kajan

பரிமளா கவிதை ஒப்புவித்தாள்.

குமணன் ஓவியம் வரைந்தான்.

முதியவர் யோகாசனம் செய்தார்.

} பயனிலை

www.kedu.lk

எழுவாய் பயனிலை வாக்கியங்கள்.

1. ஆசிரியர் வழிக்காட்டினார்.

2. விவசாயி வயலை உழுதார்.

3. கிளிகள் பழங்களைக் கொத்தித் தின்றன.

4. அணில் மரப்பொந்தில் நுழைந்தது.

5. கண்மணி கண்களைச் சிமிட்டினாள்.

M.P.kajan

WWW.IKEDU.IK

செயப்படுபொருள் என்றால் என்ன?

- ஒரு செயல் நடைபெற உதவியாக இருப்பது செயப்படுபொருளாகும்.
- பெரும்பாலும் வாக்கியத்தில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே வரும்.
- ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருள் இடம்பெறலாம்; அல்லது இடம்பெறாமலும் போகலாம்.



www.kedu.lk

செயப்படுபொருளைக் கண்டறிவது எப்படி?

யாரை , எதை அல்லது எவற்றை என்னும் கேள்விகளுக்குப் பதில் தரும்.

எடுத்துக்காட்டு:

மலர்விழி பூக்களைப் பறித்தாள்.

செயப்படுபொருள்

கேள்வி : எவற்றைப் பறித்தாள் ?

www.kedu.lk

செயப்படுபொருளைக் கண்டறிவது எப்படி?

யாரை , எதை அல்லது எவற்றை என்னும்
கேள்விகளுக்குப் பதில் தரும்.

எடுத்துக்காட்டு: M.P.Kajan

தாத்தா தேங்காயை உரித்தார்.

செயப்படுபொருள்

கேள்வி : எதை உரித்தார் ?

www.kkdu.lk

செயப்படுபொருளைக் கண்டறிவது எப்படி?

யாரை , எதை அல்லது எவற்றை என்னும் கேள்விகளுக்குப் பதில் தரும்.

எடுத்துக்காட்டு:

அம்மா அண்ணனைக் கண்டித்தார்.

செயப்படுபொருள்

கேள்வி : யாரைக் கண்டித்தார் ?

www.kedu.lk